Dinamalar - 20/04/2023

# தாய்மொழியில் தேர்வு எழுத அனுமதி

## பல்கலைகளுக்கு யு.ஜி.சி., அறிவுறுத்தல்

புதுடில்லி, ஏப். 20-

ஆங்கில வழியில் பாடம் நடத்தப்பட்டாலும் தாய்மொழியில் தேர்வு எழுத, மாணவர்களை பல்கலைக்கழகங்கள் அனுமதிக்க வேண்டும் என, யு.ஜி.சி., எனப்படும் பல்கலை மானியக் குழு வலியுறுத்தியுள்ளது.

**போதனை**

நம் நாட்டில், 1,000த்துக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் மொழி பாடம் தவிர்த்து பிற பாடங்கள் ஆங்கில மொழி வாயிலாக நடத்தப்படுகின்றன.

இதற்கான தேர்வுகளும் ஆங்கில வழியிலேயே நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், மாணவர்களை உள்ளூர் மொழிகளில் அதாவது தாய்மொழியிலேயே தேர்வுகள் எழுத அனுமதிக்க வேண்டும் என பல்கலைக்கழகங்களை, பல்கலை மானியக் குழு கேட்டுக்கொண்டு உள்ளது.

இது குறித்து அனைத்து பல்கலைக்கழகங்களுக்கும், இதன் தலைவர் ஜகதீஷ் குமார் கடிதம் எழுதியுள்ளார்.

அதில் கூறப்பட்டு உள்ளதாவது:

இன்றைய கல்விச் சூழல் ஆங்கிலத்தையே மையமாக வைத்து இயங்கி வருகிறது.

புதிய கல்விக் கொள்கையில், இந்திய மொழிகளை ஊக்குவிப்பதற்கும், தொடர்ந்து பயன்படுத்துவதற்கும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

தாய்மொழி மற்றும் உள்ளூர் மொழிகளில் கற்பித்தல் மற்றும் போதனையின் முக்கியத்துவத்தை ஊக்குவிக்க வேண்டியது பல்கலையின் முக்கிய பங்காகும்.

சிறந்த அறிவாற்றல் பெற மற்றும் கற்பவர்களின் முழுமையான ஆளுமையின் வளர்ச்சிக்காக, அனைத்து இந்திய மொழிகளிலும் தகவல்தொடர்புகளை மேம்படுத்த வேண்டியது முக்கியம்.

**மொழிபெயர்ப்பு**

தாய்மொழியில் கற்பித்து, மதிப்பீடு செய்யப்பட்டால் மாணவர்களின் ஈடுபாடு அதிகரித்து, வெற்றி சதவீதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ஆகையால் ஆங்கிலத்தில் பாடம் நடத்தப்பட்டாலும், தாய்மொழியில் அவர்களைத் தேர்வு எழுத பல்கலைகள் அனுமதிக்க வேண்டும்.

பாடப்புத்தகங்களை தயாரிப்பதிலும், தாய்மொழி மற்றும் உள்ளூர் மொழிகளில் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறைக்கு ஆதரவளிப்பதிலும் உயர்கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

இதை வலுப்படுத்தும் விதமாக, தாய்மொழியில் புத்தகங்களை எழுதவும், மொழிபெயர்ப்பு செய்யவும் ஊக்குவிக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழ் உட்பட 13 மாநில மொழிகளில் ஆயுதப்படை தேர்வுகள், மத்திய அரசு பணியாளர் தேர்வாணைய தேர்வுகள் போன்றவற்றை எழுதலாம் என மத்திய அரசு அறிவித்துள்ள நிலையில், பல்கலை மானியக் குழுவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.